**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண்.** 75/2019

**வாக்குமூலம்.பி.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | தொழில் | |
| த/பெ. | கருப்பையா | வயது | 75 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 11.11.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

11. வழக்கு சொத்து தொடர்பாக ஏற்கனவே எனக்கும் வாதிகளுக்கும் இடையே வழக்கு நடந்தது என்றால் சரிதான். முந்தை அசல் வழக்கு எண்.57/2005 என்றால் சரிதான். மேற்படி 57/2005 வழக்கானது காளிமுத்து மகன் பாலையா மற்றும் என் தகப்பனார் கருப்பையா ஆகியோர் சேர்ந்து தான் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 57/2005 வழக்கில் கருப்பையா இறந்தபிறகு அவருடைய வாரிசுகளாக எங்களை சேர்த்து வழக்கு நடத்தப்பட்டது என்றால் சரிதான். முந்தைய அசல் வழக்கு எண். 57/2005 வழக்கில் என்னுடைய சகோதரர்கள் லெட்சுமணன், பொன்னம்பலம், கிருஷ்ணன் ஆகியோரை தரப்பினராக சேர்த்தேன் என்றால் சரிதான். என் சகோதரர்கள் அந்த சமயம் இலங்கையில் இருந்து தற்போது வரை இலங்கையில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள 3 செண்ட் இடத்தில் உள்ள வீட்டில் வாதிகளின் தகப்பனார் முத்தையா அம்பலத்தின் அனுமதியின் பெயரில் எனது தகப்பனார் குடியிருந்தாரா என்றால் இல்லை அனுமதியின் பெயரில் குடியிருக்கவில்லை ஆனால் பாகத்தின் அடிப்படையில் குடியிருந்தார்.

12. நான் சொல்வது தவறு என்றாலும் பாகத்தின் அடிப்படையில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. முந்தை அசல் வழக்கு எண். 57/2005 வழக்கு நிலுவையில் இருக்கும்போது முத்தையா அம்பலம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பிறகு வாதிகளை முத்தையா அம்பலத்தின் வாரிசுகளாக சேர்த்து முந்தைய அசல் வழக்கு எண்.57/2005 வழக்கு நடந்தது என்றால் சரிதான். முந்தைய அசல் வழக்கு எண்.57/2005 வழக்கு வாதிகளுக்கு சதகமாக தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். அதன் பெயரில் அறந்தாங்கி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 17/2018 என மேல்முறையீடு

தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். முதலாம் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் 2ம் மேல்முறையீடு தாக்கல் செய்தோம். அதன் 2ம் மேல்முறையீட்டு எண் தெரியாது.

13. 2ம் மேல்முறையிட்டில் எனக்கு சாதகமாக இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.57/2005 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தான் வாதிகள் என்னிடம் காலி சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து இருக்கிறார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது எனக்கு வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். அதில் கருப்பையா மகன் ஆறுமுகம் என்று குறிப்பிடப்படுவது என்னை என்றால் சரிதான். மேற்படி பட்டா எண்.4120–ல் கண்ட கணினி சிட்டாவில் கணினி சிட்டா வா.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி தன்னிச்சையாக மேற்படி பட்டாவில் தனது தகப்பனார் பெயர் கருப்பையா என்று குறிப்பிட்டு இருப்பதாகவும் அவருக்கு சுப்பையா என்ற பெயரும் இருப்பதாக கூறுகிறார்.

14. என் தகப்பனார் பெயர் சுப்பையா என்று எந்த ஆவணத்திலும் இல்லை என்றாலும் கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பழைய புலஎண்விஸ்தீர்ணம் 51 செண்ட் என்றால் சரிதான். மேற்படி பழைய புலஎண் நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டத்தில் 5A,5B என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டத்தில் புலஎண் 128/5A, 128/5B–க்கு ஹஜா மைதீன் அப்துல் சுக்குர் பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு தான் சுப்பையா என்ற பெயரில் பட்டா கொடுக்கப்பட்டது. என் தகப்பனாருக்கு எந்த காலத்திலும் பட்டா கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

15. அதன்பிறகு முத்தையா அம்பலம் பட்டா மேல்முறையீடு செய்து மேற்படி ஹஜா மைதீன் சுக்குர் பட்டாவை ரத்து செய்து முத்தையா அம்பலம் பெயருக்கு பட்டா வந்தது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டா மேல்முறையிட்டு ஹஜா மைதீன், அப்துல் சுக்குர் சமரசம் செய்துக்கொண்டு முத்தையா அம்பலம் பெயரில் பட்டா வந்தது என்றால் சரியல்ல. முத்தையா அம்பலம் அவரது சகோதரர்கள் காளிமுத்து, கருப்பையா ஆகியோர்கள் அவரது தகப்பனார் கருப்பன் அம்பலம் தாயார் குப்பம்மாள் சிலோன் போய்விட்டார்கள் என்றால் சரிதான். குப்பம்மாள் இலங்கையில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1930 ஆம் ஆண்டு கருப்பன், முத்தையா அம்பலம், கருப்பையா, காளிமுத்து ஆகியோர்கள் இந்தியா வந்தார்கள் என்றால் சரிதான்.

16. இந்தியா வந்தபிறகு மூவரும் மேல்மங்கலம் கிராமத்தில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. ரெத்தினக்கோட்டை கிராமத்தில் தான் இருந்தார்கள். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. முத்தையா, கருப்பன், காளிமுத்து வந்தபிறகு எனது தகப்பனார் 1976ல் தான் இந்தியா வந்தார் என்றால் சரிதான். அப்போது முத்தையா அம்பலம் கைப்பற்றுதல் அடிப்படையில் செட்டில்மெண்ட் காலத்தில் வழக்கு சொத்துக்கு பட்டா வாங்கினார் என்றால் சரியல்ல. மேல்மங்கலத்தில் உள்ள பூர்வீக

சொத்துக்களை என் தகப்பனார் கருப்பையா மற்றும் முத்தையா அம்பலம், காளிமுத்து ஆகியோர் சேர்த்து விற்று இருக்கிறார்களா அதுப்பற்றி தெரியாது. முத்தையா அம்பலம் என் தகப்பனார் மூத்த சகோதரர் என்பதால் வழக்கு சொத்தில் இருக்க அனுமதித்தார் என்றால் சரியல்ல.

17. அவ்வாறு இருக்க அனுமதித்தபோது முத்தையா அம்பலம் கேட்டும்போது வீட்டை காலி செய்துக்கொள்ள வேண்டும் நிபந்தனையின் அடிப்படையில் தான் இருக்க அனுமதித்தார் என்றால் சரியல்ல. அந்த வீட்டிற்கான வரி விதிப்பு ஆரம்பத்தில் முத்தையா அம்பலத்தின் பெயரிலும் அவர் காலத்திற்கு பிறகு அவர் மனைவி சிகப்பி பெயரில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மின்கட்டண ரசீது வழக்கு சொத்தில் எனக்கு பாத்தியத்தை ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் அனுமதியின் பெயரில் தான் நானும் என் தகப்பனாரும் குடியிருந்து வருவதால் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை வாதிகளிடம் ஒப்படைக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அபகரிக்க பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்கு பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணையில்லை.**